[1970 ஆகஸ்ட் 25

திருமயத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

*4 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயத்தில் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை உருவாக்கித் தர அரசுக்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, திருமயத்தை அடுத்த இருதயபுரத்தில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அமைப்பதற்காக கிறிஸ்து ராஜா நடுநிலைப்பள்ளிக்குழு விண்ணப்பித்துள்ளதா? அதற்கு இசைவு தர அரசு முன்வருமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது இருந்து வருகின்ற பயிற்சிப் பள்ளிகளே போதுமானவையாக இருப்பதாலும், தேவையை நிறைவேற்றக்கூடிய வகையில் இருப்பதாலும் புதிய பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டாம் என்ற முடிவுக்கு அரசு வந்திருக்கிறது. மேலும், ஏற்கனவே இருந்த பயிற்சிப் பள்ளிகளிலுள்ள பிரிவுகளைக்கூட குறைத்துக் கொண்டுவரும் சூழ்நிலையில்தான் இப்பொழுது இருக்கிறோம். பயிற்சிபெற்றும் பதவி பெறுமல் இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டு போவதுதான் அதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது. 1967-68-ம் ஆண்டில் ஆரம்ப/இளநிலை ஆதாரப் பயிற்சிப் பிரிவுகள் ஒன்பதை நாம் நிறுத்தினோம். பிறகு 1968-69-ம் ஆண்டில் ஆரம்ப/இளநிலை ஆதாரப் பயிற்சிப் பிரிவுகள் பன்னிரண்டை நிறுத்தினோம். 1969--70-ம் ஆண்டில் ஆரம்ப/இளநிலை ஆதாரப் பயிற்சிப் பிரிவுகள் இருபத்தைந்தை நிறுத்திவிட்டு, லோயர் கிரேடு பயிற்சியை நாம் முழுவதும் எடுத்துவிட்டோம். இப்பொழுது செகண்டரி கிரேடு பயிற்சிதான் இருக்கிறது. 1967-68-ம் ஆண்டில் 252 பிரிவுகள் இருந்தன. 1968-69-ம் ஆண்டில் 269 ஆக இருந்தன. பிறகு 1969-70-ம் ஆண்டில் எண்ணிக்கை அதிகமாகியிருப்பதன் காரணமாக மாணவர்களுடைய எண்ணிக்கை வளருகிறது என்பதை வைத்து 227 ஆக ஆக்கினோம். இந்த ஆண்டு 200 பிரிவுகள்தான் அனுமதிக்கப்படுகின்றன. இந்த வகையில் பார்த்தால், மூன்றுண்டு காலத்தில் சராசரி ஒவ்வொரு ஆண்டும் செகண்டரி/ஸீனியர் பேசிக் கிரேடு பயிற்சிபெற்று வெளிவந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 7,457 ஆகும். சராசரியாக நாம் வேலை கொடுக்க முடிந்தது 5,333 பேர்களுக்குத்தான். 6,372 பேர்கள் சென்ற ஆண்டு இறுதிக் கணக்குப்படி வேலை இல்லாமலிருக்கிறார்கள். இப்பொழுதிருக்கும் நிலைமை, எதிர்காலத்தில் ஏற்படுகின்ற வளர்ச்சித்தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டால் 1972–73-ல் ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கும் நிலைமைகள் ஏற்படும், அதற்கேற்றப்படி புதிய பயிற்சிப் பள்ளிகள், புதிய பிரிவுகள் ஏற்படுத்தலாம். இருப்பினும் அத்தகைய முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.